மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# தமிழ் இலக்கியங்களின் பிரமாண்ட புராணக் கதைகள் செல்வாக்கு

எஸ். காமராஜ்
முதுமுனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
கேரளப்பல்கலைக்கழகம், திருவனந்தப்புரம்

## முன்னுரை

பிரமாண்ட புராணம் கத்யம் மலையாள மொழியில் உரைநடையில் எழுதப்பட்டுள்ள புராணக்கதையாகும்.இதன் ஆசிரியர் நிரணம் கவிகள் இராமப்பணிக்கராவார். இந்நூல் கொல்லம் ஆண்டு 648(1473) தனு மாதம் 20-ஆம் தியதி எழுதப்பட்டதாக இப்புராணத்தின் இறுதியில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்நூலின் ஆசிரியர்,காலம் போன்றவற்றில் மாற்றுக் கருத்துகள் காணப்படுகின்றன.இந்நூல் புரூரவ ஊர்வசி கதையோடு தொடங்குகிறது. இதன் முக்கியப் பகுதியாகக் கார்த்தவீர்ய பரசுராமக் கதை, பிரகலாதன் மகாபலி கதை, சகரமைந்தர் கதை, பத்ரதீபப் பிரதிஸ்டை, கேரளத்தோற்றம் போன்றவை இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரை தமிழ் இலக்கியங்களில் பிரமாண்ட புராணக் கதைகள் பெறும் செல்வாக்குக் குறித்து ஆராய்வதை நோக்கமாகக்கொண்டு அமைகிறது. தமிழில் பிரமாண்ட புராணக் கதைகளின் செல்வாக்கு சங்க இலக்கியம், காப்பியம், இதிகாசம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், நிகண்டுகள் எனப் பகுத்து ஆராயப்படுகின்றது.

## சங்க இலக்கியம்

சங்க இலக்கியங்களில் அகநானூறு, கலித்தொகை, பரிபாடல், புறநானூறு, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி முதலானவற்றில் பிரமாண்ட புராணக் கதைக் கூறுகள் இடம்பெற்றுள்ளமை நோக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அரசர் குலத்தை அடியோடு அறுத்தொழித்த பரசுராமன் பண்டொரு நாள் வேள்வி செய்ததை மருதன் இளநாகனார், மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன் முன்முயன்று அரிதின் முடித்த வேள்வி என அகநானூற்றில் பா.220:5:6-இல் குறிப்பிட்டுள்ளார். உலகம்

முழுவதையையும் மூன்றடியால் அளந்த திருமாலை ஆசிரியர் நல்லந்துவனார், "ஞாலம் மூன்று அடித்தாய முதல்வற்கு முதுமுறைப் என்று கலித்தொகையில் பா.124:1-இல் எடுத்துரைக்கின்றார். கிரண்யகசிபின் புதல்வனும் மாவலியின் தந்தையுமான பிரகலாதனை, புகைந்த நெஞ்சின் புலர்ந்த சாந்தின் பிருங்கலாதன் பல பல பிணிபட எனப் பரிபாடலில் பா.4:11:12-இல் குறிப்பிடுகிறார். சகரரால் தோண்டப்பட்ட கடலைக் காரிக்கிழார், குணாது பொருதொடு கடற்குணக்கும் எனப் புறநானூற்றில் பா.4:11:12-இல் பாடியுள்ளார். ஐம்பூதங்களையும் ஒரு சேரப்படைத்த மழுவாகிய வாளையுடைய திருமாலை மாங்குடிமருதனார், மழுவாள் நெடியோன் தலைவான் ஆக என மதுரைக்காஞ்சியில் பா.455:1-இல் விளக்கியுள்ளார்.

**காப்பியம்**

காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி போன்றவற்றில் பிரமாண்ட புராணக்கதைகள் பயின்றுவந்துள்ளன. அவற்றுள், வாமனன் மூன்றடியால் உலகளந்ததை, திரண்டமர் தொழுதேத்துந் திருமானின் செங்கமலவிரண்ட புயான் மூவுலகு மிருடீர நடந்தனையே என்று சிலப்பதிகாரத்தில் (17:3)- இல் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். திருமாலால் ஒடுக்கப்பட்ட அரக்கர் குலத்தலைவனான மாவலியைச் சீத்தலைச் சாத்தனார், முரிவார் சிலை மாவலி பெருமான் சீர்கெழு திருமகள் என மணிமேகலையில் (19:54:55)- இலும், சமதக்கினியின் மகனும் சத்திரியர்களை இருபத்தோர் முறை கருவறுத்தவருமான பரசுராமனை, பரசுராமனின் பால் வந்தணுகான் என்று (30:5) குறிப்பிடுகின்றார். வாமன பகவானைத் தோலாமொழித்தேவர், வாமனத் திருவடிச் சேடமும்" எனச் சூளாமணியில் (பா.217)எடுத்துரைக்கின்றார்.

**இதிகாசம்**

இதிகாசங்களில் கம்பராமாயணத்திலும், வில்லிபுத்தூராழ்வார் பாரதத்திலும் பிரமாண்ட புராணக் கதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள், கம்பராமாயணம் (பாலகாண்டம்) வேள்விப்படலத்தில் 440 முதல் 465 வரையிலான பாடல்கள் மாவலி கதையை எடுத்துரைக்கின்றன. மாவலி என்னும் அசுரன் பூமியையும் தேவலோகத்தையும் தன்வசப்படுத்திக்கொண்டு அனேக தானமும் தர்மமும் செய்தான் என்பதைக் கம்பர், ஏனமெனுந்திறல் மாவலி யென்பான் வானமும் வையமும் வவ்வுதல் செய்தான் என்று பா.441:3:4-லும்,மாவலி திருமாலுக்கு மூவடி மண் வழங்க உடன்பட்டதையும் அதைச் சுக்கிராச்சாரியார் தடுத்ததை, சிந்தை யுவந்தெதி ரென்செய வென்றான் அந்தணன் மூவடி மண்ணரு ளுண்டேல் வெந்திற லோயிது வேண்டு மெனாமுன் தந்தென னென்றனன் வெள்ளி தடுத்தான் என்று பா.448- லும், கடல் உண்டாகுமாறு பூமியைத் தோண்டியவரான சகரமைந்தர்கள் குறித்தக் கதையை, வாட்டம் மீக்கொளச் சகரர்கள் வடவையின் மறுகி என்று பா.514-லும் கம்பர் எடுத்துரைக்கின்றார். பரசுராமப் படலத்தில் 1342 முதல் 1375 வரையிலான பாடல்கள் பரசுராமன் குறித்த கதையைக் குறிப்பிடுகின்றன. பரசுராமன் பெருஞ்சினத்தோடு வந்தமையை, என்னும் மளவினில் வாகை மிருள்கீறிட வொளியாய்

மின்னும்படி புடை வீசிய சடையான் மழுவுடையான் பொன்னில் மலை வருகின்றது போல் வானல் கால்வான் உன்னுந்தழல் விழியானுரு மதிர்கின்ற தொருரையான் என்று பா.1342-இல் குறிப்பிடப்படுகிறது. வில்லிபாரதத்தில் விஸ்ணுபகவான் வாமன வடிவம் கொண்டு மூன்றடியால் உலகை அளந்து மாவலியை அழித்ததை வில்லிபுத்தூரார்,ஆவியழித்தனை தூணிலுதித்தடலாடகனைத் தலைநாண் மாவலியைச் சிருமாணுருவத்துடன்வார் சிறைவைத்தனையா என வீட்டும பருவம் 3-வது போர்ச்சருக்கத்தில் பா.18-இலும்,பரசுராமன் கார்த்தவீர்யனை அழித்ததை, ஆயிரம் பதின் மடங்கு தேரிப மதன் மும்மடங்கு காலாளுடனணியாக்கி யாயிரம் புயத்தகுச் சுனனிகரென வழியாற்றுணிப்புண்ட வாயிரம் புயத்தவனென வெதிர்த்தனனாலாயிரவாகு என்று துரோண பருவம் 14-வது போர்ச்சருக்கத்தில் பா.38-இலும் குறிப்பிட்டுள்ளார்.

**பக்தி இலக்கியம்**

பக்தி இலக்கிய வரிசையில் தேவாரத்திலும், நாலாயிர திவ்விய பிரபந்தத்திலும் பிரமாண்டபுராணக் கதைகளின் செல்வாக்கு பயின்றுவந்துள்ளமை எடுத்துரைக்கப்படுகிறது.பரசுராமனால் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் கோகரணத்தைத் திருநாவுக்கரசர்,குன்றுகள் நெருங்கி விரிதண்டலை மிடைந்து ஊர் கோகரணம் என்று பா.3:79:1-இல் குறிப்பிடுகிறார். ஓணநாளன்று தோன்றும் மாவலியைத் திருநாவுக்கரசர், ஓணப் பிரானும் ஒளிர்மாமலர் மிசை உத்தமனும் எனப் பா.4:105:10-இல் பாடுகிறார். விசுஷ்ணுபகவான் வராக அவதாரமெடுத்து பகைவரை அழித்ததைப் பொய்கையாழ்வார், உரா அய் உலகு அளந்த நான்று வராகத்து எயிற்று அளவு போதா ஆறு என் கொலோ என்று பா.84-இல் எடுத்துரைக்கின்றார்.திருமால் வாமன வடிவம் கொண்டு மாவலியிடம் மூன்றடி நிலம் கேட்டதைப் பேயாழ்வார், வாய்மொழிந்து வாமனனாய் மாவலிபால் மூவடி மண் நீ அளந்து கொண்டு நெடுமாலே எனப் பா.18-இல் தருகின்றார். பரசுராமனைப் பற்றி குலசேகராழ்வார், முன் ஒரு நாள் மழுவாளி சிலை வாங்கி அவன் தவத்தை முற்றும் அழித்தாய் எனப் பா.9:9-இல் குறிப்பிடுகிறார்.

**சிற்றிலக்கியம்**

சிற்றிலக்கியங்களில் சோமேசர் முதுமொழி வெண்பா, தேசிகபிரபந்தம், கலிங்கத்துப்பரணி முதலானவற்றில் பிரமாண்டபுராணக் கதைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் இராமன் சீதையை மணந்து கொண்டு அயோத்திக்குப் புறப்பட்டு வருகையில் பரசுராமன் எதிர்பட்டுப் பலவகைத் தீமொழிகளைக் கூறினான் என்பதை இதன் ஆசிரியர், இன்சொலி ராமனியம்ப இரேணுகைசேய் துன்பமொழியகன்றான் என சோமேசர் முதுமொழி வெண்பா பா.10-இல் குறிப்பிட்டுள்ளார். விசுஷ்ணு பகவான் பரசுராம அவதாரமெடுத்து பகைவர்களை அழித்ததை தேசிகப்பிரபந்தத்தில், பரசுமுனிவன் வடிவுகொண்டு பகைவரை துணித்தனன் என்று அதன் ஆசிரியர் பா.11-இல் பாடியுள்ளார். திருமால் வாமன வடிவம் கொண்டு உலகளந்ததைச் செயங்கொண்டார், பாதங்கொள

மாண் உருவாய்ப் புவி இரந்த அஞ்ஞான்று” என கலிங்கத்துப்பரணி அதிகாரம் பா.12-இல் எடுத்துரைக்கின்றார்.

**நிகண்டுகள்**

நிகண்டுகளில்,1.1.பரசுபாணி,1.2.திரிவிக்கிரமன்,வாமனன் பற்றிய குறிப்புகள் சேந்தன் திவாகரத்தில் காணப்படுகின்றன. பிங்கல நிகண்டில் 2.7.பரசுராமன், 2.80.இந்திரன்கோகாமதேனு,திரிவிக்கிரமன்,5.1.கார்த்தவீர்யன்,5.30.சகரர் குறித்த குறிப்புகள் இடம்பெறுகின்றன.1.5.பரசுபாணி,12.108.பரசுராமன்,வாமனன் பற்றிய குறிப்புகள் சூடாமணி நிகண்டில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

தொன்மங்களை எடுத்தாளுகின்ற மரபு சங்க காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வருகின்றது. ஒரு புராணத்திலுள்ள கதைகள் பிற புராணங்களிலும் வரலாம் என்பது மு.அருணாசலத்தின் கருத்தாகும். இக்கதைகள் புராணங்களில் மட்டுமல்ல இலக்கியங்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளன.அதனடிப்படையில் பிரமாண்ட புராணக் கதைகளின் செல்வாக்கானது தமிழில் சங்க இலக்கியம்,காப்பியம்,பக்தி இலக்கியம்,சிற்றிலக்கியம்,நிகண்டுகள் எனப் பகுத்து ஆராய்ந்த செய்திகள் மேற்கூறப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

1. கோபால கிருஸ்ணமாசாரியார்,வை.மு, வில்லிபுத்துரார் இயற்றிய மஹாபாரதம்,குவை பப்ளிகேசன்ஸ்,சென்னை.
2. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ), சங்க இலக்கியம் மூலம் முழுவதும்,மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. சாம்பசிவ சாஸ்திரி, கே, (ப.ஆ), பிரமாண்டபுராணம், கேரளப்பல்கலைக் கழகம்,திருவனந்தபுரம், 1936.
4. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும் உரையும், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்,1986.
5. வத்சன், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் பாகம் 2, தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை.
6. வை.மு.கோ, கம்பராமாயணம், உ.வே.சா.நூல் நிலையம், அடையாறு,சென்னை.